**புத்தளம் நகர சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு புத்தளம் நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வடமேல் மாகாண உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 32,403,641 ஆன சம்பள மீள்நிரப்பல் படிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்களின் கீழ் வடமேல் மாகாண உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திடமிருந்து கீடைக்க வேண்டிய ரூபா 470,852 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 354,275 தொகையான வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கையிலுள்ள இருப்பு ரூபா 22,336,988 ஆக இருந்ததுடன் பயன்பாட்டு பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 2,869,145 ஆக இருந்தமையால் ரூபா 19,467,843 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தின் கடன் மீதி ரூபா 25,818,406 ஆக இருந்ததுடன் மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் அம்மீதி ரூபா 29,878,258 ஆக இருந்தமையால் ரூபா 4,059,852 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 120,734,338 தொகையாக இருந்ததுடன் அத்திகதியில் பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 204,952,915 ஆக இருந்தது. அதில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட செலுத்த வேண்டிய மற்றும் பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 40,913,569 மற்றும் ரூபா 154,135,121 ஆக இருந்தது.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

ரூபா 218,736,894 கூட்டுத்தொகையான 09 கணக்கு விடயங்களுக்குரிய சொத்துக்கள் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) நகர சபை கட்டளைச் சட்டம் | |
| 177 (2) ஆம் விதி | வருடாந்த நிதிக் கூற்றுக்களின் கணக்கு பொழிப்பொன்று பொது மக்களின் அறிந்து கொள்ளலுக்காக அரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| நிதிப் பிரமாணம் 571 | ரூபா 40,913,567 தொகையான வைப்புக்கள் தொகையில் மீளச்செலுத்த முடியுமான வைப்புக்களை விடுவிப்பதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நகர சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 19,894,172 ஆக காணப்பட்டதுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,240,776 ஆக இருந்தது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

நிதி விளைவுகளில் ரூபா 4,653,396 ஆன அதிகரிப்பு தொடர்பில் உழைத்த வருமானம் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக ரூபா 164 மில்லியன் தொகையான மதிப்பிடப்பட்ட வருமானத்தில் ரூபா 62 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 93,736,390 தொகையான நிலுவை வருமானத்தில் ரூபா 12,782,707 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் மொத்த பற்றாக்குறை ரூபா 118,849,573 ஆக இருந்தது.

**2.3.2 வீதவரி மற்றும் வரி**

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 122 அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 16,247,202 ஆக இருந்தது.

**2.3.3 குத்தகை வாடகை**

சபைக்குச் சொந்தமான ஆதனங்களை குத்தகை அடிப்படையில் வருடக் கணக்காக அறவிடப்படாத ரூபா 19,453,493 தொகையை உறுதிப்படுத்துவதற்கு முடியாமை காரணமாக அறவிடுவதில் நிச்சயமற்ற நிலைமையொன்று காணப்பட்டது.

**2.3.4 முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 15,057,456 ஆன முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டின் போது புத்தளம் நகர சபையினால் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த ரூபா 445,900,000 பெறுமதியான 16 நிர்மாண வேலைகளை நிறைவேற்ற தவறியிருந்தது.

(ஆ) ரூபா 59,100,000 மதிப்பிடப்பட்ட செலவினமான 04 அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட உள்ளவாறான செலவினம் ரூபா 18,948,612 ஆக இருந்ததுடன் அச் செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பௌதீக மற்றும் நிதிச் செயல் முன்னேற்றத்தை அடைந்து கொள்ள முடியவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2003 மற்றம் 2004 ஆம் ஆண்டுகளின் போது இரண்டு அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக் கொண்ட கடன்களிலிருந்து கொடுப்பனவு செய்வதற்குள்ள ரூபா 943,684 தொகையான கடன் மற்றும் உரிய வட்டியை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக் கொண்ட ரூபா 27,835,510 தொகையான கடன் தொகைக்குரிய வட்டி தவனை மற்றும் கடன் தவணை என்பவற்றுக்காக நகர சபையினால் 2004 திசெம்பர் 30 ஆந் திகதி முதல் 2016 திசெம்பர் வரை செலுத்தியிருந்த ரூபா 7,190,822 தொகை கொடுப்பனவு செய்வதற்கிருந்த கடன் மற்றும் வட்டியிலிருந்து கழிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 விளைவற்று/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

சபைக்கு சொந்தமான காணப்பட்ட ரூபா 4,234,130 பெறுமதியான 06 சொத்துக்கள் 06 வருடங்களாக விளைவற்று/ குறைவாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன.

**3.4 திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

நகர சபை எல்லையில் நாளாந்தம் உருவாகும் 15 டிராக்டர் அளவிலான கழிவுப் பொருட்களில் 04 டிராக்டர் அளவு சேதனப் பசளை உற்பத்திக்காக பயன்படுத்தப்படுவதுடன் எஞ்சிய 11 டிராக்டர் அளவில் திறந்த வெளியில் இடப்பட்டு வந்தன.

**3.5 மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 நவம்பர் 12 ஆந் திகதி 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நிரந்தர நியமனமொன்று வழங்கியதால் 82 ஊழியர்கள் மிகையாக இருந்ததுடன் அவர்களின் சம்பளம் மற்றும் படிகள் என்பவற்றுக்காக உள்ளூராட்சி ஆணையாளரின் (வடமேல்) மூலம் ரூபா 32,214,466 கிடைக்க வேண்டியிருந்தது.

(ஆ) 28 அமைய மற்றும் அமைய ஊழியர்களுக்காக ஆண்டில் ரூபா 8,533,759 ஆன சம்பளம், நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் மேலும் 10 ஊழியர்களுக்கு நியமனக் கடிதமொன்றோ வழங்காமல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) முன் நிகழ்ச்சித்திட்டங்கள் / மதிப்பீடு தயாரிக்கப்படாமல் சுகாதார மற்றும் வீதிப் பிரிவுகளில் ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை செயற்படுத்துதல்**

2010 ஒக்தோபர் 05 ஆந் திகதிய வ/பி/செ/05/03 ஆம் இலக்க வடமேல் மாகாண பிரதான செயலாளின் கணக்காய்வு குழு கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) உள்ளகக் கணக்காய்வு | போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) வருமானம் நிர்வாகம் | நிலுவை வருமானத்தை அறவிடுவிடுவதற்கு முறையான வேலைத்திட்மொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம் | நாளாந்தம் சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்களில் 73 சதவீதம் அளவில் திறந்த வெளிக்கு வெளியேற்றப்படுவதன் காரணமக ஏற்படக்கூடிய சுற்றாடல் பாதிப்பினை தவிர்ப்பதற்கு சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) சொத்துக்கள் கட்டுப்பாடு | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களின் பாதுகாப்பு தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |